**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 63/2012**
**C/W. OS. 208/2011**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.02.2026 | | |
| பெயர்: | நசீர் அகமது (PW–4 Chief & cross ) | தகப்பனார் பெயர்: | நூர்தீன் |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தலைமை ஆசிரியர், வடகால் | வயது : | 58/2026 |

**<u>முதல் விசாரணை : 16.02.2026</u>**

நான் வடகால் கிராமத்தில் உள்ள ரஹ்மானியா உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.05.1994ல் 6ம் வகுப்பில் சேர்க்கப்பட்ட சின்னையன் குமாரர் பாபு என்பவர் சம்மந்தமாக எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை வந்தது. அதன் பேரில் சாட்சியமளிக்கிறேன். நான் மேற்படி உயர்நிலைப்பள்ளியில் 28 வருடங்களாக ஆசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 15 வருடங்களாக தலைமை ஆசிரியராக பணிபுரிகிறேன்.

எங்களது பள்ளியில் 29.05.1994ல் 6ம் வகுப்பில் சேர்க்கப்பட்ட சின்னையன் குமாரர் பாபு என்பவரின் மாற்றுச்சான்றிதழின் அடிக்கட்டை, சேர்க்கை பதிவேடு, சேர்க்கை விண்ணப்பம் ஆகியவற்றை கொண்டு வந்திருக்கிறேன். **சேர்க்கை விண்ணப்பம் சா.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதில் காலம் 8 ல் பெற்றோரின் பெயர் என்ற இடத்தில் கலா, க/பெ. (லேட்) சின்னையன் என்று எழுதப்பட்டுள்ளது. அதில் பாதுகாவலரின் உறுதிமொழி என்ற இடத்தில் கலா கையெழுத்து செய்துள்ளார்.

சேர்க்கை விண்ணப்பத்தின்படி 5ம் வகுப்பு வரை சபாநாயகர் முதலியார் இந்து தொடக்கப்பள்ளியில் படித்துள்ளார். இதில் 3ம் வகுப்பு மட்டும் ரஹ்மானியா தொடக்க பள்ளியில் படித்துள்ளார். சேர்க்கை பதிவேட்டின்படி (Admission Register) வரிசை எண்.570 ஆக சேர்ந்துள்ளார். அந்த **சேர்க்கை பதிவேட்டின் சான்றிட்ட நகல் சா.சா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.சா.2ல் அவரது தகப்பனார் பெயர் சின்னையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவருக்கு எங்களது பள்ளி சார்பில் மாற்றுச்சான்றிதழ் கடந்த 18.12.1999ல் வழங்கப்பட்டுள்ளது. அந்த **மாற்றுச்சான்றிதழின் சான்றிட்ட நகல் சா.சா.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.சா.3ல் அவரது தகப்பனார் பெயர் சின்னையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் பள்ளியில் 7ம் வகுப்பில் தேர்ச்சி பெறவில்லை என்ற நிலையில் மாற்றுச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுச்சான்றிதழ் ஆவணத்தின்படி அவரது தாயார் கலா மாற்றுச்சான்றிதழை பெற்றிருக்கிறார்.

பாபுவின் சேர்க்கையின்போதும் பள்ளியை விட்டு சென்றபோதும், நான் மேற்படி பள்ளியில் பணியில் சேரவில்லை.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

**(ஆரம்பித்த நேரம்– 13.36)**

1. நான் தற்போது ரஹ்மானியா உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ரஹ்மானியா தொடக்கப்பள்ளி என்பது வேறு. தொடக்கப்பள்ளிக்கும் உயர்நிலைப்பள்ளிக்கும் தனித்தனி தலைமை ஆசிரியர்கள், ஆனால் நிர்வாகம் ஒன்று. நான் 1997ம் வருடம் பட்டதாரி ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். பிறகு நிரந்தரமாகி கடந்த 2009ம் வருடம் முதல் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

2. சா.சா.1ன் படி பாபு என்பவர் கடந்த 29.05.1994ல் பள்ளியில் 6ம் வகுப்பில் சேர்ந்துள்ளார். அதற்கான விண்ணப்பம் தான் சா.சா.1 என்றால் சரிதான். சா.சா.1 ல் 8வது காலத்தில் முகவரியாக நம்பர் 22, ஈசானிய தெரு, சீர்காழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சா.1ல் 15 காலம் வரை ஆசிரியரால் நிரப்பப்பட்டது, அதற்கு கீழ் கலாவால் கையெழுத்து செய்யப்பட்டது. மேற்கண்ட சா.சா.1 ல் ஆசிரியரால் நிரப்பப்பட்டதும், கலாவால் கையெழுத்து செய்யப்பட்டதும் வேறு வேறு மையினால் என்றால் ஆசிரியர் அவர் வைத்திருக்கும் பேனாவால் நிரப்புவார், பெற்றோர்கள் அவர்கள் கொண்டு வரும் பேனாவால் கையெழுத்து செய்வார்கள், அதனால் வேறு வேறு மை இருக்கலாம். பெற்றோர் என்ற இடத்தில் இருக்கும் கலாவின் கையெழுத்தானது எனக்கு சாட்சிய சம்மன் வந்த பிறகு நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல.

3. சா.சா.1 ல் 15 காலம் வரை சுப்ரமணியன் என்ற ஆசிரியரால் நிரப்பப்பட்டது. நான் எதை வைத்து சுப்ரமணியன் எழுதினார் என்று கூறுகிறேன் என்றால் அவரது கையெழுத்து எனக்கு பரிச்சயம் என்பதால் கூறுகிறேன். 1 முதல் 15 காலம் வரை நாங்களாகவே தன்னிச்சையாக நிரப்பிக்கொண்டோம் என்றால் சரியல்ல. சா.சா.1 ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

4. சா.சா.2 ல் வரிசை எண்.570 முதல் 586 வரை உள்ளது, அதில் வரிசை எண்.570 மட்டும் தனிப்பட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. வரிசை எண்.570க்கு நேராக தரப்பினர்களின் கையெழுத்து இல்லை என்றால் நாங்கள் பொதுவாக அந்த இடத்தில் கையெழுத்து வாங்க மாட்டோம். சா.சா.3 ல் கலாவின் கையெழுத்து தற்போதுதான் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. பாபு என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சா.சா.3ல் தரப்பினரின் முகவரி இல்லை என்றால் அதில் பொதுவாக முகவரி இருக்காது. சிவா மகன் பாபுவிற்கும் நான் தாக்கல் செய்துள்ள சா.சா.1 முதல் சா.சா.3 வரையிலான ஆவணங்களுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–14.01)**